RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# தாய் தெய்வ வழிபாடும் சமூக நீட்சியும் - செவ்விலக்கியங்களை முன்வைத்து

**க. ஈஸ்வரன் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, கேஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர், இந்தியா

# Mother Goddess Worship and Social Continuity: A Study Based on Classical Tamil Literature

**K. Easwaran [a, *]**

[a] Department of Tamil, KG College of Arts & Science, Coimbatore, India

* Corresponding Author: easwaran.k.s@kgcas.com

**ABSTRACT**

The existence of primordial human societies prior to the emergence of organized communal social systems constitutes an important area of anthropological and cultural inquiry. These early societies evolved through diverse cultural practices, among which worship occupied a central position. Such practices were founded not merely on experience and rational knowledge but also on systems of belief that shaped collective consciousness and social organization. These beliefs gradually developed into forms of divine worship, often centered on the veneration of ancestors and local deities. In their early manifestations, such religious practices were institutionalized within the framework of folk or minor deity worship. Within these evolving religious traditions, the figure of the mother occupied a unique and significant position. Although women appear to have held an important status in the earliest stages of social development, subsequent socio-cultural transformations gradually relegated them to a secondary position. With the advancement of civilization and the consolidation of social institutions, women became closely associated with clan-based and community-based ritual practices. Over time, this process contributed to the elevation of the mother figure into the status of a Mother Goddess or Female Deity, resulting in the formation of enduring traditions of goddess worship. This study investigates the origins and evolution of female-centered worship traditions, tracing their development from early social practices to established religious institutions. It further examines how these traditions were assimilated into literary discourse and represented within classical Tamil literature. By analyzing literary references to Mother Goddess and Female Deity worship, the study explores the cultural, social, and religious dimensions of goddess traditions and their role in preserving collective memory and social continuity. The article thus seeks to elucidate the historical emergence, transformation, and literary representation of Mother Goddess worship, while highlighting its significance in the socio-cultural evolution of Tamil society.

**Keywords:** Mother Goddess Worship, Female Deities, Folk Religion, Social Continuity.

## முன்னுரை

பண்பாட்டியல் மரபை மீறிய செயலாகவும், செய்முறையாகவும் இருந்து வருவது குழு சார்ந்த வழிபாட்டு முறையாகும். இவ்வழிபாடு கால சுழற்சியில் பொருளாதாரவியல் என்று பரப்பப்பட்ட சமூகத்தில் சிறு மற்றும் பெரும் என்ற இருநிலையில் தன்னைத் தகவமைத்து நகர்ந்து செல்கின்றது. ஆனால் இப்பிரிவு என்பது சமூகப் பண்பாட்டியல் அடித்தளத்தில் இருந்து பார்க்கும் பொழுது, தெய்வப் பிரிவினை என்பது ஏற்புடையதாக இல்லை. காரணம் தொடக்க கால அல்லது தொல்குடி வழிபாட்டு

முறை என்பதே ஒரு இனம் மற்றும் குழு சார்ந்து பின்னாளில் பண்பாடு சார்ந்து பிரிவற்ற தன்மையில் இருந்து வந்தது. நாகரீகம் என்ற இருட்டடிப்பின் பின்புலத்தில் இத்தகையத் தன்மை குடிகளின் வழிபாட்டு முறையையும், வழிபாட்டுத் தன்மையையும் மாற்றியமைக்கத் தொடங்கியது. பின்பு தான் இத்தெய்வப் பிரிவு ஏற்படுகின்றது. அவை சிறுதெய்வம், பெருதெய்வம் என்ற வகைக்குள் அடக்கப்படுகின்றது. இந்த அமைப்பு பொருள்சார் பண்பாடாக மாற்றப்படுகின்றது. பின்பு முன்னோர் வழிபாட்டை அல்லது மூத்த வழிபாட்டை சிறுதெய்வம் என்ற வழக்கில் பயிற்றுவிக்கப்பட்டது. இம்முறை சார்ந்த ஆழம் வேர் தனக்கான குரங்கு வெளியாகவும் தனக்கான சடங்கியலையும் உலகமயமாக்களுக்குள் அடக்கிக் கொண்டது இருப்பினும் தனது வெளி என்பது விளிம்பு நிலை என்ற தன்மையில் தான் உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இத்தகைய தன்மையை நாம் இன்றும் சாலையோர மரத்தடி, கல் போன்ற வழிபாட்டு முறைகளில் பார்க்கும்பொழுது தெளிவாகின்றது. தொல்குடி மாந்தரின் மூதாதையர் வழிபாடு என்பது பின்னாளில் எவ்வாறு சிறு தெய்வம் என்ற வகைப்பாட்டிற்குள் வந்தது என்பதை பக்தி இலக்கிய காலத்தோடு ஒப்பிட்டு அணுக வேண்டிய தேவை உள்ளது. காரணம் தொல்குடி சமூக அருவ வழிபாடு என்பது பக்தியில் உருவமாக மாற்றம் பெறுகின்றது. இம்மாற்றம் என்பது தனக்கான இடம், நிலம், வழிபாட்டு முறை போன்ற அனைத்தையும் விரிவுபடுத்துகின்றது. இம்முறை பின்னாளில் பார்ப்பனியமயமாக்களில் மூழ்கடிக்கப்படுகின்றது. பார்ப்பனியம் என்ற ஒற்றைக் கருத்தாடல் அனைத்து வழிபாட்டு முறையையும் மாற்றியமைத்தது. இம்மாற்றத்தின் தொடக்கமே சிறுதெய்வம், பெரும்தெய்வம் என்ற வகுப்பு முறை என்பதை நாம் புரிதலுக்கு உள்ளாக்க வேண்டும். இத்தகைய இருவேறு முகப்புகளின் தாய்தெய்வம் என்பதும் மறுக்க முடியாத ஒன்றாகத்திகழ்கின்றது. தாய்தெய்வ வழிபாடு என்பது எவ்வாறு தொடக்கம் பெற்றது, அதன் பரிணாமம் என்ன என்பதையும் இலக்கிய தரவுகளின் அடிப்படையில் இக்கட்டுரை விளக்க முற்படுகின்றது.

## சிறுதெய்வ வழிபாடு

முன்னோர் வழிபாடு என்பதே காலப்போக்கில் சிறுதெய்வமாக்கப்பட்டது. இத்தகைய சிறுதெய்வ வழிபாடு என்பது இயற்கையில் இருந்து தோன்றி இருக்க வேண்டும். இயற்கை வழிபாடே பண்டைய காலத்தில் இருந்து வந்ததனைச் சங்கப் பாடல் வழி கூறிச்சென்றுள்ளனர் நம் முன்னோர்கள் என்று அறிய முடிகிறது. இத்தகைய சங்க இலக்கியத்தில் தெய்வ வழிபாட்டினை பெருந்தெய்வம் என்றே கூறியுள்ளனர் நம் முன்னோர்கள். இடைக்காலத்தில் வந்த பக்தி இலக்கியத்தில் தான் 'சிறுதெய்வம்' என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இதனை

"இருநிலத்தில் எமக்கெதிரா வாரு மில்லை

சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்" (தேவாரம் பா. 5)

தேவாரப் பாடலில் திருநாவுக்கரசர் சிறு தெய்வத்தினைக் கூறுகிறார். இதே கருத்தினையே இராமலிங்க அடிகள் அவர்களும்,

"நலிவுறு சிறுதெய்வம்" (திருவருட்பா. பா. 59)

என விளக்கம் தந்துள்ளார். இவ்விரு அடியார்களும் சிறுதெய்வம் என்ற சொல்லினைப் பயன்படுத்தி இருக்கின்றனர். சங்க இலக்கியங்களில் சிறு தெய்வம் என்ற சொல் காணப்படவில்லை. பெருந் தெய்வம் என்ற சொல்லைக் காண முடிகிறது. பெருந்தெய்வத்தினை,

"வெருவரு கடுந்திறல் இருபெருந் தெய்வத்து

உருவுடன் இயைந்த தோற்றம் போல," (அகம். 360: 6-7)

என்று அகநானூறு விளக்கம் தருகின்றது. இதே போன்று பெருந்தெய்வம் என்ற சொல்லினை குறுந்தொகை 263: (3-4), புறநானூறு 58:10, திருமுருகாற்றுப்படை அடி. 160 போன்ற வரிகளும் சுட்டிச்செல்கின்றன. தெய்வம் என்று குறிப்பிடாமல் பெருதெய்வம் எனக் குறிப்பிடப்படுவதால் சிறு தெய்வம் இருந்தாகப் பொருள் கொள்வது யூகத்தின் அடிப்படையில் சரியாக இருக்கலாம். ஆனால் சிறு என்ற வகைப்பாடு முன்னோர் இலக்கியமான சங்க இலக்கியத்தில் இல்லை என்பதையும் அறிவார்ந்த சமூகம் நோக்க வேண்டும். சிறுதெய்வங்கள் என்பது மக்கள் தங்களது விருப்பமான வழிபாட்டிற்காக உருவாக்கியதாகும். சிறுதெய்வம் என்பதை நமது முன்னோர் வழிபாடாக ஏற்றுக் கொள்ளலாம் என்பதை சமூகப் பின்னனியில் பார்க்க வேண்டும்.

## சிறுதெய்வ வழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

மானுட சமூகம் சிந்திக்கத் தொடங்கிய போது அவர்களின் சிந்தனையோட்டத்தில் பற்பல வினாக்கள் எழுந்தன. அத்தகைய வினாக்களுக்கு பொதுவான விடையாக இயற்கை வழிபாடு இருந்தது.

இதுவே தெய்வ வழிபாட்டின் தோற்றம் என்று ஏற்றுக்கொள்ளலாம். பின்னாளில் இவை முன்னோர் மீது ஏற்றப்பட்டது. அடுத்ததாக சமயப் பூசலின் காரணமாக சிறுதெய்வம் என்று மாற்றம் பெற்றது. எனவேதான் சிறுதெய்வ வழிபாட்டின் வரலாறு, மாந்தரின வரலாறாக உள்ளது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். ஏனெனில் இவ்வழிபாடே நமது முன்னோர் வழிபாடாகும். தங்களது முன்னோரைத்தான் தெய்வமாகப் பாவித்து வழிபட்டு வருகின்றனர். குலதெய்வ வரலாற்றினை வைத்துத்தான் அவர்களின் பூர்வீகம் எது எங்கிருந்து வந்தனர் என்பதனையும் அறிய முடிகிறது. "வழிபாடு மனிதனுடைய அச்ச உணர்வில் இருந்தும் குற்ற உணர்வில் இருந்தும் உண்டாகி இருப்பதாகக் கூறப்படுகிறது" (தி.அ.அவினாசிலிங்கம், கலைக்களஞ்சியம், தொ.1, ப. 451) வழிபாடு என்பது சமூகத்தில் வாழுகின்ற மக்களை ஆற்றுப்படுத்தவும் நெறிப்படுத்தவும் வழி செய்கிறது என்பது பொதுவான கருத்தாகும். இத்தகைய வழிபாட்டு முறைகளால்தான் மனிதன் பக்குவப்பட்டான் என்பதும் மிகையல்ல. காலமாற்றத்திற்கு ஏற்ப தங்களின் வழிபாட்டு முறையினை மனிதன் மாற்றி வந்திருக்கிறான். இதனால்தான் இன்றளவும் இளைய சமுதாயத்தினரும் இவ்வழிபாட்டினைத் தொடர்சியாகப் பல்வேறு தலைமுறை தாண்டியும் அறுபடாச் சங்கிலித் தொடராகப் பின்பற்றி வருகின்றனர்.

## பெண் தெய்வ வழிபாடு தொடக்கம்

கிமு 15 ல் இருந்து 35 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பெண் தெய்வம் வழிபாடு தோன்றியிருக்கலாம் என்று வரலாற்று ஆய்வறிஞர்கள் கூறுகின்றனர். இருப்பினும் அதிதி (தேவமாதா/வானக் கடவுள்களின் தாய்) என்ற பெண் தெய்வம் தான் முதல் பெண் தெய்வம் என்று ரிக்வேதம் கூறுகின்றது. இந்த அதிதி என்பவள் விவஸ்வான், ஆர்யாமா, பூஷா, த்வஷ்டா, சவிதர், பக, தாதா, வருணா, பித்தா, சக்ரா, சூரியன், விஷ்ணு ஆகிய 12 ஆதித்யர்களின் தாய் என்று கூறப்படுகின்றாள். கொற்றவை பிந்தியவள். குறிஞ்சியும் முல்லையும் திரிந்த நிலம் தான் பாலை. பாலை நிலத்தெய்வம் தான் கொற்றவை. ஆனால் பாலைக்கு முந்திய நிலமான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நிலங்கள் உருவாக்கம் பெற்றிருந்தன. இந்நிலங்களின் கடவுள்களாக வருணன், திருமால், இந்திரன் போன்றோர்கள் சுட்டப்படுகின்றார்கள். இவர்களின் தாய் அதிதி என்று கூறப்படுகின்றது. இதன் அடிப்படையில் அதிதி என்பவளே முதன்மை பெண் தெய்வம் என்ற கருத்து நிலைக்கு வரலாம். இதற்கு பின்பாக தொல்காப்பியம் சிங்கத்தின் மேல் உலாவந்த கொற்றவை என்று கூறுகிறது. வெற்றி தெய்வமாக தொல்காப்பியர் கூறுகின்றார். இக்கொற்றவையை பழையோள் என்று வேறு பெயர்கள் மூலம் அழைக்கப்படுகின்றார்கள்.

மறங்கடைக் கூடிய குடிநிலை சிறந்த

கொற்றவை நிலையும் அகத்திணைப் புறனே ( தொல்,பொருள். 62)

பின்பு காப்பியங்களின் வழி கண்ணகி வழிபாடு என்பது பரவலாக்கம் பெறுகின்றது. இதனைத் தொடர்ந்து சமூகவெளியில் பெண் வழிபாடு சார்ந்த பார்வை என்பது இனத்திற்காக உயிர் நீத்தவள், கணவனுக்காக உயிர் நீத்தவள், குடும்பத்திற்காக உயிர் நீத்தவள் என்று பட்டியல் நீளத் தொடங்குகின்றது. அதிகமாக பெண் தெய்வம் உருவாக்கம் நடந்தேறியது. இதில் அம்மன் வழிபாடு என்பது வாழ்வியல் சார்நிலையில் முக்கியத்துவம் அடைகின்றது. இவ்வாறாகவே பெண் தெய்வம் சார்ந்த வரலாற்று தொடக்கம் நிகழ்கின்றது.

## பெண் தெய்வ வகைகள்

தமிழ்ப் பண்பாட்டியல் நிலைப்படி பெண் தெய்வம் சக்தி, செழிப்பு மற்றும் பாதுகாப்பு என்ற அடையாளப் பின்புலத்தில் வணங்கப்படுகின்றன. இம்முறையை அடிப்படையாகக் கொண்டு ஊர் தெய்வம், பொது தெய்வம், இன தெய்வம், குலதெய்வம், வீட்டு தெய்வம், பத்தினி தெய்வம், காவல் தெய்வம், எல்லை தெய்வம் என்ற பல நிலைகளில் பார்க்கப்படுகின்றன. இருப்பினும் இவர்கள் அம்மன் என்ற பொதுப் பெயரால் அழைக்கப்படுகின்றனர். இத்தகைய தெய்வங்கள் பொதுவாக ஊருக்கு ஒதுக்குப்புறம், நீர் நிலை மற்றும் காடு போன்றவற்றை இருப்பிடமாகக் கொண்டு இயக்கப்படுகின்றனர். இக்கோவில்களுக்கு முறையான அமைப்பு, சிலை வடிவமோ இல்லை. தற்காலத்தில் இன அடையாளம் என்பது பெருகிவரும் நிலையில் இத்தகைய தெய்வங்களுக்கு கோயில் சிலை வடிப்பு அதிகரிக்க தொடங்கி விட்டது என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

செவ்விலக்கியங்களில் தாய் தெய்வ வழிபாடு ஊடுருவல்.

செவ்விலக்கியங்களில் பெண் தெய்வ வழிபாடு குறிப்பாக போர்க் கடவுளான கொற்றவை வழிபாடு முதன்மையானதாக இருந்தது. காலப்போக்கில் காடு, நீர்நிலைகள் சார்ந்த சிறு தெய்வ வழிபாட்டுடன் இரண்டற கலந்து இருந்தது. தாய் வழிபாட்டு முறை இயற்கையை வணங்குதல்,

வீரமரணம் அடைந்த பெண்கள் வழிபாடு என செவ்விலக்கியங்களில் பெண் சார்ந்த தெய்வங்கள் ஊடுருவி இருந்தது. காரணம் இனக்குழு சமூகத்தின் தொடக்க காலம் தொட்டு செழுமையின் அடையாளமாகவும் வலிமையின் குறியீடாகவும் பெண் கருதப்பட்டதால் பெண் வணங்குதலுக்கும் வழிபாட்டிற்கும் உரியவள் ஆனாள் இவை சார்ந்த குறிப்புகள் இலக்கியங்களில் ஏராளம்

"கொற்றவை சிறுவ" (திருமுருகாற்றுப்படை)

"ஓங்கு புகழ் காணமல் செல்வி" (அகநானூறு)

"கொற்றவை கோலம் கொண்டோர் பெண்" (பரிபாடல்)

சங்ககாலத்தில் இத்தகைய தெய்வங்கள் ஊர் தெய்வமாகவும் குலதெய்வமாகவும் மக்களின் அன்றாட வாழ்வில் ஊடுருவி வேரூன்றி இருந்தன என்பதனை அறிவார்ந்த சமூகங்கள் நோக்க வேண்டும்.

## தாய் தெய்வ உருவாக்கம் இலக்கியப் பார்வையில்

பழந்தமிழர் மற்றும் சிந்து சமவெளி நாகரிக காலத்தில் வளமையும் /கருவுறுதல் மற்றும் இயற்கையின் உற்பத்தித் திறனை மையமாகக் கொண்டு தோன்றிய வழிபாடாகும். பெண்களை உருவாக்க நிலையில் வைத்து அதாவது உருவாக்க சக்தி படைத்தவள் என்று கருதி வழிபாடு நிகழ்ந்தது. அத்தகைய வழிபாடு களிமண் அல்லது மண் சார்ந்த பொருள்கள் கொண்டு சிறிய உருவங்கள் படைத்து வழிபாடு நடத்தினர். இதுவே பிற்காலத்தில் இலக்கியவெளியில் திரிபு ஏற்பட்டு கொற்றவை, சக்தி மற்றும் பல்வேறு தெய்வங்களாகப் பரிணாம வளர்ச்சி அடைந்தது. இதனை செல்வி, ஆய், ஞாய், நற்றாய், ஈன்றாள்" போன்ற சொற்கள் புலப்படுத்துகின்றன. பழந்தமிழர் வாழ்வியல் என்பது இனக்குழுவில் தொடங்குகிறது. இதன் தலைமை என்பது முழுமையாக பெண் சார்ந்தே நிற்கின்றன. இவர்களின் தொழில் முறை வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. இதிலும் பெண்களே முதன்மை பெற்று திகழ்ந்தனர். இச்சமூக வாழ்வியலே தாய் வழி சமூகமாக பார்க்கப்படுகிறது. உழவுத் தொழிலின் தொடக்கத்தில் பெண்களே முக்கியப் பங்கு எடுத்தனர் என்று ஆய்வாளர் கைலாசபதி கூறுகின்றார். இக்காலகட்டத்தில் பெண்ணை தெய்வமாக வணங்கினர் என்று ந.சி. கந்தையா கூறுகின்றார். இக்கூற்று தாய் தெய்வ வழிபாட்டின் தொடக்கமாகப் பார்க்கப்படுகின்றது. பின்பு மக்களின் பெருக்கம், உணவு உற்பத்தி பெருக்கம், கால்நடை பெருக்கம், மழை வேண்டி, நோய்களிலிருந்து காத்தல் போன்ற காரணங்கள் அடிப்படையில் தாய்தெய்வ வழிபாடு தோன்றியது என்று ஆய்வாளர் தோ.பரமசிவன் கூறுகின்றார். சங்க இலக்கியங்களில் தாய்தெய்வ வழிபாடு என்பது காடுகளில் தொடக்கம் பெற்றுள்ளது என்று பார்க்க முடிகின்றது. இதனை அகநானூற்று பாடல் கூறுகின்றது.

"ஓங்கு புகழ்

கானமர் செல்வி அருளலின் வெண்கள்

கடுகால் வேங்கை செம்பூம்"

என்ற பாடல் விளக்குகிறது. மற்றும் தாய் தெய்வ வழக்கத்தை

"வலை, வலந்தன்ன பென்னிழன் மருங்கில்

கழிப்பிய பின்றே" (பொருநராற்றுப்படை)

என்று பொருநராற்றுப்படை கூறுகின்றது. பின்பு காட்டில் உள்ள தெய்வத்தை காட்டு கொற்றி என்று கலித்தொகை கூறுகின்றது. துர்க்கைக்கு பூசை செய்ததை குறுந்தொகையும் சுட்டுகின்றது.

"விடர்முகை அடுகத்து விரல் கெழு சூலிக்கு

கடனும் பூணாம் கைந்நூல் யாவாம்" (குறும்)

இதன் மூலம் பெண்தெய்வ வழிபாடு உள்ளாதை இலக்கியங்கள் புலப்படுத்துகின்றன.

சமுகவெளியில் தாய் தெய்வத் தொன்மம்

இன்றைய சமூகம்சார் வழிபாட்டு மரபில் தாய்தெய்வமானது, மானுட வாழ்வியலில் இருந்து பிரிக்க இயலாத ஒன்றினைவாகப் பார்க்கப்படுகின்றது. இத்தகைய தாய்தெய்வங்கள் இடம் சார்ந்தும் மொழி சார்ந்தும் தன்னை விரிவு படுத்தியுள்ளன. இடம் சார்ந்து பார்க்கும் பொழுது அவை வாழ்வியல் சார்ந்து அமைகின்றன. மொழி சார்ந்து பார்க்கும் பொழுது அவை பன்முகத்தன்மை பெற்று நிற்கின்றன. இவ்விரு வகைமையைத் தாண்டி இன்று இனம் சார்ந்து இத்தெய்வங்கள் அதிகமாக முன்னெடுக்கப்படுகின்றன. ஊட்டியில் அதிகம் வழ்கின்ற படுகர் இனம் சார்ந்த மக்கள் தங்களின்

தாய்தெய்வமாக கெத்தேய் அம்மனை அதிகம் வழிபடுகின்றனர். அண்டை மாநிலமான கேரளாவில் பகவதி அம்மன் வழிபாடும் தய்தெய்வ வழிபாட்டின் தொன்மமாக பார்க்கப்படுகின்றது. பகவதி அம்மன் என்பது கண்ணகி வழிபாடாக சில இடங்களிலும் கொற்றவை வழிபாடாக சில இடங்களிலும் பார்க்கப்படுகின்றது. இன்றைய சமூகம்சார் நிலையில் அனைத்து மக்களிடையேயும் இத்தகைய தாய்தெய்வ வழிபாடு என்பது மிகவும் பின்பற்றப் பட்டு வருகின்றன. இத்தன்மையில் ஆதிபராசக்தி வழிபாடு மற்றும் அம்மன் வழிபாடு போன்றவற்றை நாம் சுட்டிக் காட்டலாம்.

## முடிவுரை

இனம்சார் மற்றும் தெய்வம்சார் பண்பாடு என்பது மானுட வெளியில் சமூகம், வழ்வியல் என்ற இரண்டு தளத்தில் தங்களை நகர்த்திச் செல்கின்றன. இத்தகைய நகர்வு என்பது சிறு, பெரு (முன்னோர், பின்னோர்) என்று தன்னை விரிவு படுத்திச் செல்கின்றன. இலக்கியவெளியில் பெருந்தெய்வங்கள் மட்டும் சுட்டிக்காட்டப்பட்ட நிலை, பின்பு வாழ்வியலில் சிறு, பெரும் என்ற இருபெரும் பிரிவுகள் நிற்பதை காணமுடிகின்றன. இப்பிரிவுகளில் பெண்சார்ந்த வழிபாட்டு மரபியலில் என்பது மிக முக்கியத்தன்மை பெற்று திகழ்கின்றன. இதில் ஆதி தெய்வம் அதிதி என்றும் பின்பு கொற்றவை, கண்ணகி, அம்மன் என பல நிலைகளில் தங்களை விரிவுபடுத்திச் சொல்கின்றன. பெண் சார்ந்த வழிபாடு இலக்கியங்களில் போர் தெய்வமாகவும் தாய்தெய்வமாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளதையும், வாழ்வியலில் தாய்தெய்வங்கள் பெறும் முக்கியத்துவத்தையும், அவற்றின் தன்மைகளுக்கேற்ப பிரிக்கப்பட்டுள்ள வகைமைகளையும் தாய்தெய்வம் சார்ந்த சமூகவெளித் தொன்மங்களையும் கிடைக்கப் பெற்றத் தரவுகளின் அடிப்படையில் தாய்தெய்வ வழிபாடும் சமூக நீட்சியும்- செவ்வியக்கியங்களை முன்வைத்து என்னும் தலைப்பிலான கட்டுரை விளக்குகின்றது.

## References

கலைக்களஞ்சியம் (தி.அ.அவினாசிலிங்கம்)

சங்க இலக்கியத் தொகுதி (கழகவெளியீடு)

திருவருட்பா

தேவாரம்

தொல்காப்பியம் மந்திரங்களும் சடங்குகளும் (தொ.பரமசிவம்)

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License